மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். ஆய்விலே இருக்கிறது, பார்த்து எடுப்போம். அறிவிப்பு வந்தவுடனே எடுக்கப்படும். (குறுக்கீடு) பார்க்கலாம், அதைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடு) ஆய்விலே இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) வேறு எதுவுமில்லை.*

5. அறிக்கைகள் அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்களுக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.*

திரு. அ. சௌந்திரபாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 24-வது மற்றும் 25-வது ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுத் தலைவரின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

6. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும், வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

(ஆ) கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன் துணி நூல் மற்றும் கதர்த் துறை)

(இ) கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன் துணி நூல் மற்றும் கதர்த் துறை)

(அ) கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2008-2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்*